காவல் துறை அதிகாரிகளுடைய முன்னிலையிலே அந்த மக்கள் சொன்ன வார்த்தை, "எங்களைக் காவல் துறைகூட சரிவரக் காப்பாற்ற இயலவில்லை; போதுமான ஆட்கள் இல்லை. எங்களை—850 பேரை மிகப் பத்திரமாகக் கொண்டுவந்து, தமிழக எல்லையிலே சேர்த்தது, வீரப்பனும் அவருடைய ஆட்களும்" என்று சொல்லி, காவல் துறையினுடைய மிகப் பெரிய அதிகாரிகளுடைய முன்னிலையிலே அந்த மக்கள் சொன்னார்கள். நாங்கள் நேரிலே இருந்து கேட்டோம். எதற்காக நான் இதைச் சொல்கிறேன் என்றால்,......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சீக்கிரம் பேசி முடிக்க வேண்டும்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மனிதாபிமான முறையிலே அவர் செய்த ஏனைய தவறுகளை நான் சரி என்றோ அல்லது மன்னிக்கப்பட வேண்டுமென்றோ சொல்ல விரும்பவில்லை. ஆகவே சில நேரங்களில் சில மனிதர்கள், ஏதோ எல்லா நேரங்களிலும் மோசமாக நடந்து கொள்வதில்லை. சந்தர்ப்ப சூழ்நிலைகள் சில பேருக்கு அப்படியொரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்து விடுகிறது. அவர்கள் திருந்துவதற்கு, அதன் மூலமாக நாட்டினுடைய மக்கள் வரிப்பணம் மிச்சப்படுவதற்கு அதேநேரத்திலே அப்பாவி மக்கள், அந்த மலைவாழின மக்கள், அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய மக்கள் என்றைக்கும் நிம்மதியாக வாழ்வதற்கு அரசு எடுத்து வருகின்ற நடவடிக்கை, ராஜ்குமார் மீட்கப்பட வேண்டும் என்ற அந்த நடவடிக்கை, அமைதியாக, பொறுமையாக, சிக்கல் இல்லாமல் தீர்க்கப்பட வேண்டும் என்று கேட்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீரப்பனிடமிருந்து கன்னட நடிகர் ராஜ்குமார் அவர்களை மீட்பது குறித்து, இன்று இந்த அவையில், தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியினுடைய சார்பில் திரு. அழகிரி அவர்கள் 18 நிமிடங்களும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் திரு. பழனிசாமி அவர்கள் 8 நிமிடங்களும், அ.தி.மு.க. சார்பில் திரு. சுந்தரம் அவர்கள் 10 நிமிடங்களும், பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் திரு. ஐ. கணேசன் அவர்கள் 19 நிமிடங்களும், இந்திய தேசிய லீக் சார்பில் திரு. லத்தீப் அவர்கள் 28 நிமிடங்களும், அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பில் திரு. சந்தானம் அவர்கள் 5 நிமிடங்களும், மார்க்சிஸ்ட் கட்சியின் சார்பில் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் 6 நிமிடங்களும், பி.ஜே.பி. சார்பில் திரு. வேலாயுதன் அவர்கள் 8 நிமிடங்களும், புதிய தமிழகம் சார்பில்

டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் 4 நிமிடங்களும், பேராசிரியர் தீரன் அவர்கள் 10 நிமிடங்களும், ஆக மொத்தம் ஏறத்தாழ 2 மணி நேரம், இந்த விவாதத்திலே பங்கேற்று, அவையை ஒத்திவைத்து இந்தப் பிரச்சினையை முன்னிறுத்தி இதுபற்றிய முடிவை அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, உரையாற்றியிருக்கிறார்கள்.

*முற்பகல் 11-35*

நம்முடைய நண்பர் திரு. அழகிரி அவர்கள் முதலிலே இதை ஆரம்பித்து வைத்தார்கள். அவருடைய பேச்சு மென்மையாக தொடக்கத்திலே இருந்தாலும்கூட, இறுதியாக இரண்டொரு கருத்துகளை, இந்த அரசைத் தாக்குகிற வகையில், குறிப்பாக என்னைப் புண்படுத்துகின்ற வகையில், இங்கே வெளியிட்டார்கள். அதைத் தவிர, அவருடைய பேச்சு மிக ஒழுங்காக வரையறுக்கப்பட்ட வகையில் அமைந்திருந்ததை நான் பாராட்டுகின்றேன்.

பிரிவினைவாதிகளுக்கு இந்த அரசு துணை போகிறது என்று சொன்னதோடு நிறுத்தாமல், பிரிவினைவாதிகளையெல்லாம் ஒன்று சேர்க்கிறது; அதாவது, பிரிவினைவாதத்திற்குப் புதிய பலத்தைத் தருகிறது என்று இந்த அரசை அல்லது அரசை நடத்துகின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தை ஒரு பிரிவினைவாத இயக்கம்போல அவர்கள் இங்கே கற்பித்துக் காட்டினார்கள்.

இன்னொன்று சொன்னார்கள்; 30 கோடி ரூபாய் வீரப்பனுக்குச் சென்றிருக்கிறது; அது தமிழ்நாடு அரசின் சார்பாகவா, கர்நாடக அரசின் சார்பாகவா என்பது எனக்குத் தெரியாது; இப்படிச் சொல்லப்படுகிறது என்று குறிப்பிட்டார்கள்.

பொதுவாக, இப்படிச் சொல்லப்படுகிறது, கேட்கப்படுகிறது, செய்தி வெளியாகிறது, மக்கள் பேசிக்கொள்கிறார்கள் என்ற அளவில், பொத்தாம் பொதுவிலே பேசுவது, அழகிரி போன்ற பொறுப்புள்ள உறுப்பினர்களுக்கு அழகல்ல என்றாலும்கூட நான் அதை, அந்தச் சொல்லப்படுவதாக அவர் சொன்ன அந்தக் கருத்தை, அந்தச் செய்தியை வன்மையாக மறுக்கிறேன். அதுபோன்று பணம் கொடுத்து, பேரம் பேசி, ராஜ்குமாரை மீட்பதாக இருந்தால், தொடக்கத்திலேயே அந்தக் காரியத்தைச் செய்து, இந்நேரம் மீட்டிருக்கலாம். ராஜ்குமார் மீட்கப்பட்டு 100 நாட்கள் ஆகிவிட்டன என்று விழாகூட கொண்டாடியிருக்கலாம். இப்போது, இன்னும் மீட்கப்படவில்லை 100 நாட்களாக, என்று வருந்திக்கொண்டிருக்கிறோம். நான் அவருக்கும், தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களுக்கும், இந்த அவைக்கும்,

2000 நவம்பர் 13] [கலைஞர் மு. கருணாநிதி]

இந்த அவையின் வாயிலாக நாட்டு மக்களுக்கும் தெரிவித்துக்கொள்கின்றேன். நாடு பிரிய வேண்டும் என்ற கருத்தை, அந்தக் கொள்கையை, திராவிட முன்னேற்றக் கழகம் கைவிட்டு பல ஆண்டுகள் ஆகின்றன.

1962 ஆம் ஆண்டு, பேரறிஞர் அண்ணா அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளராக, எங்கள் தலைவராக வீற்றிருந்தபோது, பொதுக் குழுவைக் கூட்டி, இந்த நாட்டினுடைய ஒருமைப்பாட்டிற்கும், ஒற்றுமைக்கும் நாம் என்றைக்கும் உதவியாக இருக்க வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்தி, திராவிட நாடு பிரிவினையை, கோரிக்கையைக் கைவிட்டாயிற்று. நான் திரு. அழகிரி அவர்களுக்கும், மற்றவர்களுக்கும் உறுதியாகச் சொல்கிறேன். நாங்கள் கைவிட்டது மாத்திரமல்ல; அந்தப் பிரிவினையைக் கோரி, யார் குரல் கொடுத்தாலும், அவர்களை நாங்கள் நிச்சயமாக அடக்கியே தீருவோம் என்பதை இந்த அவையிலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இது, திரு. அழகிரி அவர்களுக்கும், அவருடைய கட்சியினருக்கும், நாட்டு மக்களுக்கும் நான் தருகின்ற உறுதிமொழியாகும்.

இப்போது, வீரப்பனுடைய இந்தப் பிரச்சினையில் கொஞ்சம் நாம் பின்னோக்கிச் சென்று, இன்றைய நிலைக்கு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். 1978 ஆம் ஆண்டு, கர்நாடக மாநிலத்திலே, இராமாபுரம் காவல் நிலைய எல்லையில், பரமசிவம் என்பவரைக் கொலை செய்ய குருப்பன் என்பவருக்கு உதவி செய்ததிலே தொடங்கி, கடந்த 22 ஆண்டுகளிலே 124 பேரைக் கொலை செய்ததாக வீரப்பன்மீது 156 வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. வழக்குகள் பதிவு செய்யப்பட்டுவிட்ட காரணத்தினாலேயே குற்றவாளி வாதம் சரியல்ல; அப்படியே வீரப்பன்மீது குற்றப் பத்திரிகை வாசிக்கப்பட்டு, வீரப்பன் தண்டிக்கப்பட்டாலும்கூட, மேல் கோர்ட் இருக்கிறது என்கின்ற சமாதான வாதம்கூட, இன்றைய அரசியல் சூழ்நிலையிலே எழலாம். நான் அதைப்பற்றி கவலைப்படாமல் செய்திகளை வரிசைப்படுத்திச் சொல்கின்றேன்.

*முற்பகல் 11-40*

வீரப்பன், கர்நாடகாவிலே 1986ஆம் ஆண்டு ஒரு முறை பிடிபட்டதாகவும், வனத் துறை பயணியர் இல்லத்திலே சில நாட்கள் கைதியாக வைக்கப்பட்டிருந்ததாகவும், பெங்களூரிலே, சார்க் மாநாடு நடைபெற்ற நேரத்தில் காவல் துறையினுடைய முழுக் கவனமும் அது

தொடர்பான பாதுகாப்பு ஏற்பாடுகள்மீது இருந்த காரணத்தால், வீரப்பன் தப்பிச் சென்றுவிட்டதாகவும் ஒரு செய்தியும் உண்டு.

தமிழகத்திலே வீரப்பன் குழுவினர் நடத்திய சம்பவங்களை மாத்திரம் வரிசைப்படுத்திப் பார்த்தால், 14-7-1987; அப்போது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இல்லை. நான் எந்த ஒரு ஆட்சியையும் குறை சொல்வதற்காகச் சொல்லவில்லை. வரலாற்று விவரங்களைச் சொல்வதற்காக இதைக் குறிப்பிடுகின்றேன்.

14-7-1987 அன்று வீரப்பன் குழுவினர், சத்தியமங்கலம் வன அலுவலர் சிதம்பரம் என்பவரைச் சுட்டுக் கொலை செய்தார்கள்.

7-8-1989 அன்று தமிழ்நாடு பர்கூர் காவல் நிலைய எல்லையில், வனக் காவலர் பழனிச்சாமி, வாச்சர் சுப்பிரமணியம் மற்றும் மஸ்தி என்ற நபர் ஆகிய மூவரையும் வீரப்பனுடைய கும்பல் கொலை செய்தது.

1991 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் பெண்ணாகரத்திலே இருக்கின்ற இந்தியன் வங்கியைக் கொள்ளையடிக்க வீரப்பன் தலைமையிலே ஒரு குழு சென்றபோது, அந்த வங்கியைக் கொள்ளையடிக்கக்கூடும் என்ற தகவலின் அடிப்படையில், அங்கே போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்த போதும்கூட, வீரப்பன் ஒரு காவலரைச் சுட்டுக் கொன்றுவிட்டு .303 என்ற துப்பாக்கி ஒன்றையும் திருடிக்கொண்டு தப்பிச் சென்றுவிட்டான். ஆயுதம் தாங்கிய காவலர்களை நேருக்கு நேர் சந்தித்தும், வீரப்பன் தப்பிச் சென்ற இந்தச் சம்பவம் 4-7-1991 அன்று நடைபெற்றது.

1993-ல் வீரப்பன் கும்பலால் வைக்கப்பட்டிருந்த கண்ணி வெடிகள் வெடித்ததில், சுரைக்காய்மடுவு என்ற இடத்தில் ஐந்து காவலர்கள் உட்பட 22 பேர் மாண்டார்கள். இதில் காவல் துறை கண்காணிப்பாளர் S.P. கோபாலகிருஷ்ணன் படுகாயம் அடைந்தார்.

கடந்த ஆட்சியில் 3-12-1994 அன்று, வீரப்பன் காவல் துறை கண்காணிப்பாளர் சிதம்பரநாதன் உட்பட மூன்று பேரைக் கடத்திச் சென்றபோது, அவர்களை விடுவிக்க வீரப்பன் விதித்த நிபந்தனை என்ன தெரியுமா? அதிரடிப் போலீசை வாபஸ் பெற வேண்டும். வீரப்பனைத் தேடும் பணியைக் கைவிட வேண்டும். வீரப்பனுடைய அண்ணன் மாதய்யனை விடுதலை செய்ய வேண்டும். வீரப்பன் சரணடைந்தால் அவன்மீது வழக்கு போடவே கூடாது. இதுதான் நிபந்தனை.

2000 நவம்பர் 13] [கலைஞர் மு. கருணாநிதி]

ஆனால் இதைப்பற்றி *4-12-1994* அன்று அரசு சார்பில் கோவை மாவட்ட கலெக்டர் விடுத்த அறிக்கையில், வீரப்பனால் கடத்தப்பட்டிருக்கின்றவர்களுடைய உயிரைக் காப்பாற்றுவதுதான் முக்கியம். எனவே வீரப்பனைத் தேடும் பணி, வீரப்பனுடைய நிபந்தனைகளின்படி நிறுத்தப்பட்டுவிட்டது என்று தெரிவித்தார்.

*6-12-1994* அன்று அரசாங்கத்தின் சார்பில் கோவை மாவட்ட ஆட்சியர் மீண்டும் கூறியது: "வீரப்பனிடமிருந்து எனக்குச் செய்தி வந்துள்ளது. அந்தச் செய்தியிலே வீரப்பன் கேட்டுக்கொண்டபடி, வீரப்பனோ, அவரது பிரதிநிதியோ என்னைச் சந்திக்கலாம். அவருக்கு எந்த ஆபத்தும் ஏற்படாது என்ற உறுதி அளிக்கப்படுகிறது. மேலும், பணயமாக பிடித்து வைக்கப்பட்டிருப்பவர்களுக்குத் தேவையான உணவுப் பொருளைக் கொண்டு செல்ல தடை எதுவும் இருக்காது. அதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுவிட்டன. வீரப்பனுடைய ஆட்கள் மலைக் கிராமங்களுக்கு நேரிலே வந்து, எவ்வித தடையும் இல்லாமல் உணவுப் பொருளை எடுத்துச் செல்லலாம். அதற்குத் தடை கிடையாது." கலெக்டர் இதைச் சொல்லும்போது, ஒரு நிருபர் குறுக்கிட்டு "வீரப்பனுடைய தூதுவன் வர அரசுத் தரப்பில் வாகன வசதி செய்து கொடுக்கிறீர்களே, இந்த நிலையிலே தூதுவன் துப்பாக்கியுடன் வந்து பேசுகின்றானே, இது சரியா?" என்று கேட்கிறார். கலெக்டர் சொல்கிறார் "அவர் சொந்த பாதுகாப்புக்கு துப்பாக்கியுடன் வருகிறார். காரணம் அவர் காட்டுக்குள் போகிறார், வருகிறார். எனவே துப்பாக்கி ஏந்துகிறார்" என்று கலெக்டர் செய்தியாளர்களுக்கு பதில் அளித்தது, அன்றைய செய்தி ஏடுகளிலே வந்திருக்கிறது. அப்போது தலைமைச் செயலாளராக இருந்த அரிபாஸ்கர் விடுத்துள்ள செய்தியில் "வீரப்பனுடைய தளபதி பேபி இரண்டு கோரிக்கைகளைச் சொன்னார். ஒன்று வீரப்பன் கோஷ்டியினர் காட்டுக்குள் உணவு கொண்டுவரும்போது, எவ்வித துன்புறுத்தலுக்கும் ஆளாகக் கூடாது. மற்றொன்று, சிறையிலே உள்ள வீரப்பன் கோஷ்டியை தளபதி பேபி பார்க்க அனுமதிக்கப்பட வேண்டும்." "மாவீரன் என்று நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் (இங்கே சொல்லிவிட்டதற்கு கோபித்துக் கொண்டோம். சொல்லலாமா என்று எனக்கெல்லாம்கூட சந்தேகம் ஏற்பட்டது. ஆனால், அன்றைக்கு தலைமைச் செயலாளரே சொல்கிறார் தளபதி பேபி என்று) மேலும் அரிபாஸ்கர், "இந்த நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டால், மற்ற கோரிக்கைகள் பிறகு தெரிவிக்கப்படும்" என்று பேபி, கோவை கலெக்டரிடம் கூறியிருக்கிறார். இந்தக் கோரிக்கைகளை அரசு பரிசீலனை செய்து வருகிறது. இப்போது அரசினுடைய மிக முக்கியமான முன்னுரிமை கடத்தப்பட்ட போலீஸ் அதிகாரிகளையும், மற்றவர்களையும் மீட்பதுதான்.

[கலைஞர் மு. கருணாநிதி] [2000 நவம்பர் 13

விசேஷ அதிரடிப் படையின் பணிகள் நிறுத்தப்பட்டுவிட்டன. இந்தப் படைகளை அனுப்பினால் வீரப்பன் போலீஸ் அதிகாரிகளையும், மற்றவர்களையும் கொன்றுவிடக்கூடும். பேச்சுவார்த்தை முடிந்து, பேபி வீரப்பன் மீண்டும் காட்டுக்குள் செல்ல முழு பாதுகாப்பும் அளிக்கப்படும்".

*முற்பகல் 11-45*

இதற்குப் பிறகு, வீரப்பன் தம்பி அர்ஜுனன் செய்தியாளர்களிடம் பேசுகிறார். "நாங்கள் சரண் அடைய மாட்டோம். தண்டனை அனுபவிக்க மாட்டோம். எங்களுக்கு மன்னிப்பு கொடுத்து ஜனாதிபதி எழுத்து மூலம் உத்தரவு கொடுக்க வேண்டும். அப்போதுதான் ஆயுதங்களை ஒப்படைப்போம்."

'இதற்கு மீண்டும் தலைமைச் செயலாளர் சொல்கிறார்' "ஒரு அடிப்படை விஷயத்தை நாம் மறந்துவிடக் கூடாது. இது உயிர்கள் சம்பந்தப்பட்ட விஷயம், போலீஸ் துணை சூப்பரின்டென்டெண்ட் மற்றும் இரண்டு நபர்களை நாம் மீட்க வேண்டும்" என்று தலைமைச் செயலாளர் அப்போதும் சொல்கிறார். கேள்வி கேட்கிறார்கள் செய்தியாளர்கள் "வீரப்பன் இருக்குமிடம் அரசுக்குத் தெரியுமா?" அரிபாஸ்கர் சொல்கிறார், "வீரப்பன் இருக்குமிடம் அரசுக்குத் தெரியும். ஆனால் 3 பேர்களை மீட்க அரசு பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருக்கிறது".

இதிலே அப்போது கடத்தப்பட்ட சிதம்பரநாதனைக் கூட போலீஸ் மீட்டதா, தானாக வந்து விட்டாரா என்கின்ற செய்தி அப்போது வந்தது. தானாகவே ஓடி வந்துவிட்டேன் என்று சிதம்பரநாதன் சொன்னது மாண்புமிகு உறுப்பினர்களுக்கெல்லாம் நினைவிருக்கும் என்று நான் கருதுகின்றேன்.

பிறகு, 1-1-1995 அன்று ஈரோடு மாவட்டம் பர்கூர் காவல் நிலைய எல்லையில் வீரப்பன் குழு, ராஜேந்திரன், சுப்பிரமணியம் என்ற இரு காவலர்களையும், உடையார் என்ற வாட்ச்சரையும் கடத்திச் சென்றது. 17-2-1996 அன்று ஈரோடு மாவட்டம், ஆசனூர் காவல் நிலைய எல்லையில் ஆரேபாளையத்தில் வீரப்பன் குழு மறைந்திருந்து நடத்திய துப்பாக்கிச் சூட்டில் காவல் துறை கண்காணிப்பாளர் தமிழ்ச்செல்வன் காயமுற்று, அவரது கை விரல்கள் துண்டிக்கப்பட்டன. செல்வராஜ் என்ற தலைமைக் காவலர் அந்தத் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தார். இதற்குப் பிறகு, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 12-7-1997 அன்று வீரப்பனும், கூட்டாளிகளும் கர்நாடக வனத் துறையைச் சார்ந்த 9 நபர்களைப் பிடித்து வைத்துக்கொண்டு

2000 நவம்பர் 13] [கலைஞர் மு. கருணாநிதி]

தனக்கும் தன்னுடைய கூட்டாளிக்கும் பொது மன்னிப்பு உள்ளிட்ட சில சலுகைகளை வழங்கினால் மட்டுமே அவர்களை விடுவிக்க முடியும் என்று கூறிவிட்டார்கள். தமிழக அரசும், கர்நாடக அரசும் பிடிபட்ட நபர்களுடைய உயிருக்கு ஆபத்து என்று கருதி, வீரப்பன் சரண் அடைவது குறித்து கர்நாடக மாநில முதலமைச்சர் மற்றும் அவரது குழுவினரோடு சென்னையில் 19-8-1997 அன்று நான் கலந்துரையாடியபோது எடுத்த முடிவுகளில் ஒன்றுதான் வீரப்பன் சம்பந்தப்பட்ட வழக்குகளில் புலன் விசாரணையின்போது கைது செய்யப்பட்டவர்கள்மீது எந்தவிதமான தனிப்பட்ட குற்றச்சாட்டும் இல்லையென்றால், அவர்கள் விடுவிக்கப்பட வேண்டும் என்பதாகும். அதைத்தான் நண்பர் சந்தானம் அவர்கள் இங்கே சொன்னார். அந்தப் பேச்சுவார்த்தையில் அந்தக் கைதிகள் எல்லாம் விடுவிக்கப்பட வேண்டும் என்ற ஒரு நிபந்தனையும் விதிக்கப்பட்டது என்று சொன்னார்கள். ஏதாவது குறிப்பிட்ட குற்றச்சாட்டுகள் அவர்கள்மீது இருக்குமேயானால், அவை உடனடியாக ஆய்வு செய்யப்பட்டு ஒரு முடிவு எடுக்கப்படும். மேலும், அனைவரையும் சட்டப்படி ஜாமீனில் விடுதலை செய்யப்படும் என்பதாகும். இந்த முடிவு அப்போது எல்லா ஏடுகளிலும் வெளியிடப்பட்டது. இந்த முடிவின் அடிப்படையில் தமிழக அரசின் சார்பில் 9-10-1997 அன்று கர்நாடக மாநில முதலமைச்சருக்கு நான் எழுதிய கடிதத்தில் 19 ஆம் தேதி நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போது எடுக்கப்பட்ட முடிவை நினைவுபடுத்தி கர்நாடக சிறையிலே இன்னமும் ஏராளமானவர்கள் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்றும் கர்நாடக அரசு அதிகாரிகளுக்குத் தகுந்த அறிவுரை கூறி உடனடியாக அவர்களை விடுவிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்றும் எழுதியிருந்தேன்.

இதைத் தொடர்ந்து 11-10-1997 அன்று நம்முடைய தலைமைச் செயலாளர், மத்திய உள் துறை அமைச்சரோடு தொலைபேசியில் பேசியதோடு, நமது அரசின் சார்பில் மத்திய அரசுக்கு எழுதிய கடிதத்திலும் 19-8-1997 அன்று இரண்டு மாநில அரசுகளிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தையின் விவரத்தைத் தெரிவித்து கர்நாடக அரசினால் தடா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்ட 121 பேர்களில் 70 பேர் நிபந்தனை ஜாமீனில் வெளிவந்துவிட்டார்கள் என்றும், 51 பேர் இன்னமும் சிறையிலே அவதிப்பட்டுக்கொண்டிருப்பதாகவும் விளக்கியதோடு அவர்களுடைய விடுதலைக்கு உதவி செய்ய வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டது.

[கலைஞர் மு. கருணாநிதி] [2000 நவம்பர் 13

*முற்பகல் 11-50*

இந்தத் தடா சட்டத்தைப்பற்றிக் குறிப்பாக நம்முடைய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய உறுப்பினர்கள் என்ன கருத்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நன்றாக அறிவேன். முற்போக்கு எண்ணம் உடைய எந்தக் கட்சிக்காரர்களும் தடா சட்டத்தை ஆதரிப்பதில்லை என்பதையும் நான் நன்றாக அறிவேன். ஆனால் இந்தத் தடா சட்டம் யார்மீது பாய்ந்தது என்றால் உள்ளபடியே தீவிரவாதிகள்மீது பாய்ந்து அதன் காரணமாக அவர்கள் மைசூர் சிறையில் அடைக்கப்பட்டார்களா என்றால் இல்லை. சாதாரண ஏழை-எளிய, பஞ்சைப் பராரிகள்—நீங்கள் இப்பொழுதுகூட டி.வி.-யிலே அவர்கள் காட்சியாகக் காட்டப்படும்போது கவனித்திருப்பீர்கள், எப்படிப்பட்ட பெண்கள், எத்தகைய தாய்மார்கள், எவ்வளவு வயதான கிழடு கட்டைகள்—இவர்கள் எல்லாம் அந்தச் சிறையில் இருக்கிறார்கள் என்பதை நாம் தெரிந்துகொள்ள முடியும். அதனால்தான் அழகிரி அவர்கள்கூட கேட்டார்கள். பிறகு எந்த முயற்சியாவது எடுத்தீர்களா அவர்களை விடுவிப்பதற்கு என்றுகூட கேட்டார்கள். பல முறை முயற்சி எடுக்கப்பட்டது. ஒவ்வொரு முறையும் நான் தொலைபேசியிலே பேசும்போதெல்லாம், பார்க்கிறோம், பார்க்கிறோம் என்று அன்றைக்கிருந்த கர்நாடக முதலமைச்சர் எனக்கு உறுதியளித்தார். ஓர் ஆண்டுக்கு மேலாகியும்கூட கர்நாடக அரசு எந்தவிதமான நடவடிக்கையும் இதிலே எடுக்கவில்லை என்பதால், *21-11-1998* அன்று மீண்டும் கர்நாடக முதலமைச்சருக்கு ஒரு D.O. லெட்டர் நான் எழுதியிருக்கிறேன். அந்தக் கடிதத்திலும் இந்த விவரங்களை எல்லாம் குறிப்பிட்டு நாம் அப்பொழுதே பேசியிருக்கிறோம். அதன்படி அவர்களை விட்டுவிட வேண்டும் என்று. ஏனென்றால் அந்த வன அதிகாரிகளை, கர்நாடக வன அதிகாரிகளை வீரப்பன் விட்டாகி விட்டது. விட்ட பிறகு நக்கீரன் கோபால் அவர்களுடைய முயற்சியால் அவர்கள் விடுபட்ட பிறகும் இவர்கள் விடுவிக்கப்படவில்லை, அதை ஞாபகப்படுத்தித்தான் நான் பல முறை அவருக்குக் கடிதம் எழுதினேன். ஆனால் எந்தவிதமான பயனும் ஏற்படவில்லை.

தொடர்ந்து *11-1-1999, 23-2-1999, 28-3-1999, 5-5-1999, 28-5-1999* ஆகிய நாட்களில் நினைவூட்டல் கடிதங்கள் என்னாலேயே கர்நாடக அரசுக்கு எழுதப்பட்டன. கர்நாடக அரசின் சார்பில் முதலமைச்சராக இருந்த ஜே.எச். பட்டேலே *28-5-1999* அன்று எழுதிய கடிதத்தில் வீரப்பன் சரணடையும் பட்சத்தில்தான் அந்தக் கைதிகளை விடுவிப்பதாக ஒப்பந்தம் செய்யப்பட்டது; சரணடையாத பட்சத்தில் இந்தக் கேள்வி எழவில்லை என்று அதற்கு பதில் எழுதிவிட்டார்.

இத்தடா கைதிகள் விஷயத்தில் யாரோ ஏழை-எளியவர்கள், அப்பாவி மக்கள், அவர்கள் தடா சட்டத்தின்படி கைது செய்யப்பட்டிருக்கும்

2000 நவம்பர் 13] [கலைஞர் மு. கருணாநிதி]

பொழுது வீரப்பன் சரணடைவதைப் பற்றிய பிரச்சினையே கிடையாது. இது வீரப்பன் ஒரு நிபந்தனையாக இப்பொழுது வைத்தான். அதைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. அதைக் காரணமாகக் காட்டி அவர்களை விடுதலை செய்வது என்ற கேள்வியே எழவில்லை என்று பதில் தெரிவித்துவிட்டார். இப்பொழுது வீரப்பனுக்கு அதுதான் பெரிய கோரிக்கையாக ஆகிவிட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் மிக நன்றாக அறிவீர்கள். தமிழக எல்லையைப் பொறுத்தவரையிலே மாத்திரம் நாம் எடுத்துக்கொண்டால், இங்கே ஒன்றுமே செய்யவில்லை என்று நம்முடைய அண்ணா தி.மு.க. தலைவர் இங்கே பேசினார்.

1991 ஆகஸ்ட் முதல் 1996 மே வரையில் தமிழக எல்லையிலே மாத்திரம் வீரப்பனால் கொலை செய்யப்பட்டவர்கள் 63 பேர். 1996-ல்இந்த ஆட்சி வந்த பிறகு ஜூன் முதல் இதுவரை மூன்றே பேர்தான் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். தமிழக போலீஸாரால் கைது செய்யப்பட்டவர்கள் வீரப்பனைச் சேர்ந்தவர்கள்; வீரப்பனைச் சேர்ந்தவர்கள் என்றால் யாரும் தவறாக கருதிக்கொள்ளக்கூடாது. வீரப்பன் ஒரு படை வைத்திருப்பதாகவும், அந்தப் படையிலே 150 பேரோ, 200 பேரோ இருப்பதாகவும் யாரும் கருதிக்கொள்ளக்கூடாது. அந்தக் காட்டிலேயிருக்கின்ற மக்களிலே பல பேர் வீரப்பனுக்கு உதவி செய்யக்கூடியவர்கள், அவர்களுடைய எண்ணிக்கையைத்தான் நான் சொல்கிறேன். அந்த எண்ணிக்கையிலே 1991 ஆகஸ்ட் முதல் 1996 மே வரையிலே 121 பேர் கைது செய்யப்பட்டார்கள், அந்த ஆட்சியிலே. 1996 ஜூன் முதல் இதுவரையிலும் இந்த ஆட்சியில் 135 பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள். இந்த விவரங்களையும் இந்த அவைக்கு அளிப்பது என்னுடைய கடமை என்பதால் அளித்துவிட்டேன்.

ஏதோ முன்னால் இருந்த டி.ஜி.பி. கூறிய கருத்துகளையும் அவர் எவ்வளவு சாதனைகளைப் புரிந்தார் என்பதையும் இங்கே நம்முடைய அண்ணா தி.மு.க. கட்சித் தலைவர் சுந்தரம் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். இதைப்பற்றி நான் சொல்வதைவிட கடந்த ஆட்சியில் செல்வி ஜெயலலிதா முதலமைச்சராக இருந்தபோது டி.ஜி.பி.யாக இருந்து ஓய்வுபெற்ற பிறகு 'நான் சமாளித்த சவால்கள்' என்று வைகுந்த் அவர்கள் எழுதியுள்ள பெரிய புத்தகத்தில் இந்தக் கேள்விகளுக்கெல்லாம் அவர் பதிலளித்திருக்கிறார். அவர் சொல்கிறார், "வீரப்பனைப் பிடிக்கப் பொதுவான வழிமுறைகளை வகுக்கும்பொருட்டு 10-5-1995 அன்று, அன்றைய கர்நாடக முதல்வர் தேவ கௌடாவும் தமிழக முதல்வர் ஜெயலலிதாவும் இரண்டு மாநில அதிகாரிகளோடு பேச்சுவார்த்தை நடத்தினார்கள். வீரப்பனைப் பிடிக்க மேற்கொள்ளப்படும் முயற்சிகளைப் பொறுத்தவரையில், அவன் மறைந்திருக்கும் பகுதி மிகவும் அடர்ந்த காட்டுப்

பகுதி என்பதால் அதற்குள் நுழைந்து அவனைப் பிடிப்பது அவ்வளவு எளிதான காரியமல்ல என்பதையும் நாம் முதலில் ஒத்துக்கொள்ள வேண்டும். அதோடு, அந்த அடர்ந்த காட்டுப் பகுதி தமிழ்நாட்டில் 5 மாவட்டங்களிலும், கர்நாடக மாநிலத்திலே மைசூர் மாவட்டத்திலும் சுமார் 6000 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் அமைந்திருக்கும் ஒரு பகுதியாக இருக்கிறது. மேலும், வீரப்பனும் அவன் கும்பலைச் சேர்ந்தவர்களும் நவீன ஆயுதங்களை வைத்திருக்கிறார்கள் என்பதும், கண்ணிவெடி வைப்பதில் அவன் நிபுணத்துவம் பெற்றிருப்பதும், அவன் அந்தப் பகுதியிலேயுள்ள பணக்காரர்களை மிரட்டிப் பண வசூல் செய்து வருகிறான் என்பதும் தெரிய வந்தது." (இதையெல்லாம் வைகுந்த் அவர்கள்தான் சொல்கிறார்கள்.)

*முற்பகல் 11-55*

"இதுபோன்று மலைப் பகுதிகளில் நடவடிக்கை எடுக்கும்போது வழக்கமாகப் பின்பற்றப்பட வேண்டிய இராணுவ நடவடிக்கையை ஒத்த வழிமுறைகள் இங்கு கடைப்பிடிக்கப்படவில்லை. மேலும், காவல் துறை நடவடிக்கையின்போது அப்பாவி மலைவாசிகள் துன்புறுத்தப்படுவதைத் தடுக்க எவ்வித முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை."

தேவ கௌடாவும், செல்வி ஜெயலலிதாவும் சேர்ந்து நடத்திய கூட்டத்தில் இந்தக் கருத்துகளை வைகுந்த் எடுத்து வைத்ததாக இதிலே குறிப்பிடுகிறார்.

'வீரப்பனுக்கு எதிராக எடுக்கப்பட்டிருந்த நடவடிக்கையில் முக்கிய தகவல்களைச் சேகரிக்க எந்த வகையான முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை. மக்களுக்கு வீரப்பன்மீது ஒரு ராபின் ஹூட் போன்றதொரு நல்ல கருத்து இருந்து வந்தது. தனது எதிரிகளை அரக்கத் தனமாக தயவு தாட்சண்யம் இல்லாமல் கொலைசெய்யும் அவன் ஏழை மலைவாசிகளுக்கு எப்போதுமே உதவிசெய்து கொண்டிருக்கிறான். ஆகவே பயம் காரணமாகவும் மரியாதை காரணமாகவும் மக்கள் அவனைப் பற்றிய தகவல்களைக் கொடுக்க முன்வராமலே இருந்துவிட்டார்கள். ஆனால் துரதிருஷ்டவசமாக அப்பாவி மலைவாழ் மக்கள் துன்புறுத்தப்படுகிறார்கள். சில சமயம் பெண்கள் மானபங்கப்படுத்தப்படுகிறார்கள் அல்லது கற்பழிக்கப்படுகிறார்கள் என்ற அவப்பெயரை காவல் துறையினர் சம்பாதித்திருக்கிறார்கள். இந்தக் காரணத்தினால்தான் வீரப்பனுக்கெதிராக காவல் துறை எடுத்துவரும் நடவடிக்கையில் மக்களுடைய ஆதரவையும் ஒத்துழைப்பையும் அவர்களால் பெற முடியவில்லை.

2000 நவம்பர் 13] [கலைஞர் மு. கருணாநிதி]

இதில் கவனிக்கத்தக்க வேறொரு விஷயம் என்னவென்றால், வீரப்பனுக்கெதிராக எடுக்கப்படும் நடவடிக்கையில் ஏற்பட்டுள்ள ஒரு சிறு அளவு முன்னேற்றத்தைக்கூட பெரிய அளவிலே விளம்பரப்படுத்திவிடும் ஒரு போக்கு உயர் அதிகாரிகள் மத்தியிலே காணப்பட்டது. அனைத்து முன்னேற்றங்களுக்கும் கிடைக்க வேண்டிய பெருமை முழுவதையும் உயர் அதிகாரிகளே எடுத்துக்கொள்வதால், சார்நிலை அதிகாரிகளுக்கு மன உறுதி பாதிக்கப்படும் நிலைமை ஏற்பட்டது. இதன் காரணமாகப் பொதுமக்களைப் பொறுத்தவரையில், காவல் துறையின் செயல்பாடுகள் நகைப்பிற்குரியதாக ஆகிவிட்டன. ஆகவே வீரப்பன் விவகாரம் குறித்து ஆழமாக ஆராய்ந்து மேலே கூறிய பொருள்பட ஒரு விரிவான அறிக்கையைத் தயார் செய்து ஜெயலலிதா அவர்களிடம் நான் கொடுக்க அதை அவர் அந்தக் கூட்டத்திலேயே படித்தார். தேவாரம் அவர்கள் அதற்கு மறுப்புத் தெரிவிக்க முயன்றபோது, தேவ கௌடா அவர்கள் குறுக்கிட்டு, "தேவாரம் அவர்களே, நாங்கள் எப்போதும் பெங்களூரில்தான் இருக்கிறோம். அவ்வகையில் உங்களை எங்களுக்குத் தெரியாது. ஆனால் நீங்கள் போர் உடையுடன் கையில் ஏ.கே. 47 துப்பாக்கி வைத்துக்கொண்டிருப்பதைப் போன்ற புகைப் படங்கள் மட்டும் அடிக்கடி பத்திரிகையிலே வருவதால்தான் நீங்கள் யார் என்று எங்களுக்குத் தெரிகிறது. மேலும், ஒவ்வொரு முறையும் நீங்கள் காட்டுப் பகுதிக்குப் போகும்போது வீரப்பன் மற்றும் அவனுடைய ஆட்களால் கொல்லப்பட்ட காவல் துறையினர் உடல்கள்மீது மலர் வளையம் வைக்கத்தான் போகிறீர்களோ என்ற ஐயம் ஏற்படும் வகையில் இதுவரையில் உங்களால் வீரப்பனைப் பிடிக்க முடியவில்லை " என்று உறுதியான குரலில் தேவகௌடா தெரிவித்தபோது, தேவாரம் பதில் பேசாமல் மௌனமானார்.

வீரப்பன் கும்பலைச் சேர்ந்தவர்களுடைய எண்ணிக்கை 150-லேயிருந்து வெறும் 5 ஆகக் குறைக்கப்பட்டுவிட்டது என்பதுபோல ஒரு பேச்சு அப்போது அடிபட்டு வந்தது. இது போலீஸ் தரப்பில் தரப்படும் புள்ளி விவரமே தவிர, இதில் ஒன்றும் உண்மை கிடையாது" என்று வைகுந்த் அவர்கள் அந்தப் புத்தகத்திலே எழுதியிருக்கிறார்.

மேலும், இப்போதும் "வீரப்பனிடமிருந்து நம்மைக் காப்பாற்றிக் கொள்ளும் நிலையில்தான் இருக்கிறோம். இது மிகவும் வெட்கக் கேடானது என்றாலும் இதுதான் இன்றுள்ள நிலைமை. வீரப்பனைக் கண்டுபிடிக்க காவல் துறையால் முடியவில்லை என்பதைப் பொதுமக்கள் கேவலமாகப் பேசுவது குறித்து ஜெயலலிதா அவர்கள் நன்றாகவே அறிந்திருந்தார்கள்.

[கலைஞர் மு. கருணாநிதி] [2000 நவம்பர் 13

ஆர்.எஸ்.எஸ். அலுவலகக் குண்டு வெடிப்பு வழக்கில் சம்பந்தப்பட்டிருந்த முஸ்லீம் தீவிரவாதி இமாம் அலியைப் பிடிப்பது குறித்து ஒருமுறை விவாதம் நடந்தபோது முதல்வர் ஜெயலலிதா தேவாரத்தைப் பார்த்துக் கேட்டார், "தேவாரம் அவர்களே, வீரப்பனைப் பிடிப்பது பற்றித்தான் நீங்கள் பல கற்பனைக் கதைகளைக் கூறி வந்திருக்கிறீர்கள். இந்த இமாம் அலியையாவது பிடிக்கப் பாருங்கள்" என்று கிண்டலாகக் கூறியதை (சிரிப்பு) இங்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்" என்று வைகுந்த் அவர்கள் அந்த நூலிலே விஸ்தாரமாக எழுதியிருக்கின்றார்கள்.

நண்பகல் *12-00*

இன்னொன்று; இந்த அரசை, முதலமைச்சரை அல்லது போலீஸ் இலாகாவை குறை கூறிப் பேசும் எதிர்க்கட்சிகளிலே பெரும் எதிர்க்கட்சி. தமிழ்நாட்டிலே இன்றைய நிலையிலே, அந்தக் கட்சியினுடைய சார்பிலே இங்கே பேசிய சுந்தரம் ஆகட்டும் அல்லது வெளியிலே இருக்கின்ற அதனுடைய தலைவர்களாகட்டும் என்ன பேசுகிறார்கள்? ஏன் சர்வ கட்சிக் கூட்டங்களைக் கூட்டவில்லை என்றெல்லாம் கேட்கப்பட்டது. நல்ல கேள்வி. ஏன் சர்வ கட்சிக் கூட்டங்களைக் கூட்டிக் கூட்டி பழகியவன் நான், பழக்கப்பட்டவன் நான். எந்த ஒரு விஷயத்திற்கும் அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டியிருக்கிறோம். காவிரிப் பிரச்சினையாகட்டும் அல்லது வேறு எந்தப் பொதுப் பிரச்சினையாகட்டும், அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி நானே கையெழுத்திட்டு, சர்வ கட்சித் தலைவர்களுக்குக் கடிதம் அனுப்பி செயலாளரை விட்டல்ல, நானே கையெழுத்திட்டு கூட்டத்திற்கு வர வேண்டுமென்று சொல்லி நானே டெலிஃபோனில் அழைத்து, நானே வாசலில் சென்று வரவேற்று, சர்வ கட்சிக் கூட்டங்களை நடத்திப் பழக்கப்பட்டவன் தான் இந்த கருணாநிதி (மேசையைத் தட்டும் ஒலி) என்பதிலே எந்தச் சந்தேகமும் தேவை இல்லை.

ஆனால் இந்தப் பிரச்சினை எவ்வளவு பெரிய சிக்கலானது என்பதை அறிவீர்கள். காவிரிப் பிரச்சினையிலே சொன்னார்கள். கருணாநிதி துரோகம் செய்துவிட்டு சர்வ கட்சிக் கூட்டத்திற்கு எங்களை அழைக்கிறார் என்று சொன்னார்கள். கூட்டத்திற்கு வருகின்றவர்கள் சர்வ கட்சிக் கூட்டத்திலே எடுத்த முடிவுகளை ஏற்றுக்கொண்டிருக்கிறார்களா என்றால் இல்லை.

2000 நவம்பர் 13] [கலைஞர் மு. கருணாநிதி]

சாதி, மதச் சண்டையின்போது ஒரு அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்திலே ஒரு அருமையான கருத்தை மக்கள் தலைவர் மூப்பனார் அவர்கள் சொன்னார்கள். அந்தக் கருத்தை எல்லோரும் ஏற்றுக்கொண்டோம். மாவட்டங்களுக்குத் தலைவர்களுடைய பெயரை வைக்க வேண்டாம், பேருந்து கழகங்களுக்குத் தலைவருடைய பெயரை வைக்க வேண்டாம் என்று மூப்பனார் அவர்கள் சொல்லி அதை எல்லா கட்சிக்காரர்களும் ஏற்றுக்கொண்டு உடனடியாக இந்த அரசு அதை அமல்படுத்தியது. நீங்கள் யாரும் அதை மறந்திருக்க முடியாது. இன்றைக்கும் அது நடைமுறையில் இருக்கிறது.

ஆனால் அந்த சர்வ கட்சிக் கூட்டத்திலே கலந்துகொண்ட அ.தி.மு.க. அதைப் பின்பற்றுகிறதா? இன்றைக்கும் சிவகங்கை மாவட்டம் என நாம் மாற்றி விட்டோம், சர்வ கட்சிக் கூட்டத்திலே எடுத்த முடிவின்படி. ஆனால் அவர்கள் இன்றைக்கும் பசும்பொன் தேவர் மாவட்டம் என்றுதான் அழைத்துக்கொண்டிருக்கிறார்கள். பிறகு சர்வ கட்சிக் கூட்டத்திற்கு என்ன மதிப்பு இருக்கிறது என்று நான் உங்களைக் கேட்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அது ஒரு பெரிய கட்சி நான் அதை இல்லையென்று மறுக்கவில்லை. இன்றைக்குப் பிரதான எதிர்க்கட்சி. த.மா.கா. இங்கிருக்கிறது. தமிழ் மாநில காங்கிரஸ். ஆனால் வெளியிலே ஒரு பெரிய எதிர்க்கட்சி என்று இன்றைய அளவிலே வடிவமைத்துக்காட்டப்படுகின்ற ஒரு கட்சி அ.தி.மு.க. அந்த அ.தி.மு.க. சர்வ கட்சிக் கூட்டத்திலே கலந்துகொண்டு, எல்லோரும் இணைந்து ஏற்றுக்கொண்ட ஒரு முடிவை இன்றைக்கு அமல்படுத்துகிறதா என்றால் இல்லை.

திருவாரூர் மாவட்டத்தைப் பன்னீர்செல்வம் மாவட்டம் என்றுதான் அழைக்கிறார்கள்; அதைப்போலத்தான் அம்பேத்கர் மாவட்டம் என்றுதான் வேலூர் மாவட்டத்தை அழைக்கிறார்கள். அவர்களுடைய செய்திகளிலே, அவர்களுடைய விளம்பரங்களிலே அப்படித்தான் வந்துகொண்டிருக்கிறது. சர்வ கட்சிக் கூட்டத்தினுடைய முடிவை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

அதுபோல, காவிரிப் பிரச்சினைக்கு நாம் சர்வ கட்சிக் கூட்டதைக் கூட்டினோம். அதிலே நாம் எல்லாம் சேர்ந்து எடுத்த முடிவை அவர்கள் ஏற்றுக் கொண்டார்களா என்றால் இல்லை. வெளியிலே வந்த பிறகு எதிர்த்து முழக்கமிட்டார்கள். அதாவது பரவாயில்லை. இப்போது இந்தப் பிரச்சினையிலே சர்வ கட்சிக் கூட்டத்தைக் கூட்டினால் என்ன சொல்வார்கள்? என்ன சொல்லிக்கொண்டிருக்கிறார்கள், என்ன அறிக்கை விட்டார்கள்? நாங்கள் யாரும் படித்துப் பார்க்கவில்லையா அந்த அறிக்கைகளை? வீரப்பன் கருணாநிதிக்கு பணம் கொடுக்கின்றான்.

வீரப்பனிடத்திலிருந்து பணம் வாங்கி கருணாநிதி கட்சி நடத்துகிறார். தேர்தலுக்காக பணம் வாங்கிக்கொண்டிருக்கிறார். வீரப்பனுடைய நிறுவனம்தான் சன் டி.வி. சன் டி.வி.-யை வீரப்பன்தான் நடத்திக் கொண்டிருக்கிறான் என்கின்ற அளவிற்குப் பேசுகிற ஒரு நிலையில் சர்வ கட்சிக் கூட்டத்திலே அவர்களை உட்கார வைத்து...

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலமைச்சர் yield பண்ணினால்தான் நான் உங்களுக்கு அனுமதி கொடுக்கமுடியும். உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதி காக்க வேண்டும். திரு. சுந்தரம், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) சரி, பேசுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்து கழகங்களின் பெயரை மாற்ற வேண்டும் என்ற கூட்டத்தில் எங்களுடைய கட்சியைச் சார்ந்தவர்கள் கலந்துகொண்டபோது, அதற்கு ஒப்புதல் கொடுக்க வேண்டும் என்று அவர்கள் வரவில்லை. அவர்கள் மீதிக் கருத்துகளை ஏற்றுக்கொண்டார்கள். அந்தக் குறிப்பிட்ட கருத்திலே எங்களுக்கு உடன்பாடில்லை என்று அந்தக் கூட்டத்திலே அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆக, அந்தச் சூழ்நிலை வேறு, இந்தச் சூழ்நிலை வேறு. ஒன்றை வைத்துக்கொண்டு நீங்கள் அடுத்த கூட்டத்தை நான் கூட்டவில்லை என்று கூறுவது எந்தவிதத்தில் நியாயம்?

*பிற்பகல் 12-05*

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரிப் பிரச்சினையில் திரு. வி.பி. சிங் அவர்களைப் பார்க்கப் போவதற்காக, சர்வ கட்சிக் கூட்டம் கூட்டியபோது, உங்கள் கட்சியின் சார்பிலே, அப்போது எதிர்க்கட்சியாக இருந்த நீங்கள், வருகிறோம் என்று சொல்லி, விமான டிக்கெட்டுகள் வாங்கப்பட்ட பிறகு, இறுதிக் காலத்திலே வரமாட்டோம் என்று ஓடிவிட்டீர்களே, அதற்கு என்ன பதில் சொல்கிறீர்கள்?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரிப் பிரச்சினையிலே, அந்த உடன்படிக்கையிலே உங்களுடைய கட்சியின் நிலை எங்களுக்கு உடன்பாடு இல்லையென்ற காரணத்தினால்தான் அதற்கு நாங்கள் வரவில்லை.

2000 நவம்பர் 13]

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறை அமைச்சர் சொல்வது அதுவல்ல. எல்லோரும் சேர்ந்து திரு. வி.பி. சிங் அவர்களைப் பார்ப்பதற்கு—அப்போது அவர் பிரதமர் அவரைப் பார்ப்பதற்கு எல்லா கட்சிகளும் சேர்ந்து செல்வது என்று முடிவு எடுத்து, அப்போது வருவதாகத் தெரிவித்துவிட்டு விமான டிக்கெட் எல்லாம் வாங்கிய பிறகு கடைசியாக இரத்து செய்து விட்டார்கள். அதுதான் அவர் இப்போது சொல்வது. காவிரிப் பிரச்சினைக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லையென்று சொல்லிவிடலாம், அது வேறு.

அப்போது இதே அவையில் எதிர்க்கட்சியிலே நம்முடைய அன்பிற்குரிய திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன் அவர்கள் இதே பிரச்சினையைப் பற்றிப் பேசும்போது, இங்கே முதலமைச்சராக வீற்றிருந்த அம்மா ஜெயலலிதா அவர்கள் என்ன பேசினார்கள் என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

"தமிழக அரசும் காவல் துறையும் எந்த அளவிற்கு விவேகத்துடனும், கட்டுப்பாட்டுடனும் நிதானம் தவறாமல் செயல்பட்டன என்பதை எதிர்க்கட்சித் தலைவர் திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன் அவர்களுக்குப் பாராட்ட மனம் வரவில்லை என்றாலும், தமிழகக் காவல் துறையை இழிவுபடுத்தும் வண்ணம் அவையில் அவர் பேசியது வேதனைக்குரியதாகும். வீரம் இருக்கும் இடத்தில் விவேகமும் இருக்க வேண்டும். அப்போதுதான் வீரத்தின் பலன்கள் நமக்குக் கிடைக்கும். வீரப்பனிடம் 3 உயிர்கள் சிக்கிக் கொண்டிருந்த சூழ்நிலையில், அந்த வீரர்களுக்கு எந்த ஆபத்தும் ஏற்படக்கூடாது என்கிற எண்ணத்தினால்தான் காவல் துறையினரையும், மாவட்ட ஆட்சித் தலைவரையும் தகுந்த எச்சரிக்கையுடன் நடந்துகொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தினேன்.

மாவட்ட ஆட்சித் தலைவர் எனது ஆணையின் பேரில் பேச்சுவார்த்தை நடத்த ஆரம்பித்தார். மூன்றாவது நாளில் வீரப்பன் கூட்டத்தைச் சேர்ந்த பேபி வீரப்பன் மாவட்ட ஆட்சித் தலைவரைச் சந்தித்துப் பேசினான். பேபி வீரப்பன், பின்னர் வீரப்பனின் மனைவியையும் வேறு சிலரையும் பாதுகாப்பாக வைத்துள்ள இடத்திற்குச் சென்று பார்த்துவிட்டு வந்தான். வீரப்பனின் தம்பி அர்ச்சுனன் 12-12-1994 அன்று மருத்துவச் சிகிச்சை செய்துகொள்வதற்கும், வீரப்பனின் அடாவடித்தனமான நிபந்தனைகளைத் தெரிவிப்பதற்கும் வந்தான். சிறையில் அடைக்கப்பட்டிருக்கின்ற அவனது சகோதரன் மாதையனைப் பார்ப்பதற்கும் தனது காயத்திற்கு மருத்துவச்

சிகிச்சை செய்துகொள்வதற்கும் அர்ச்சுனனுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

நாம் வெளிப்படுத்துகின்ற எந்தச் செய்தியும் மேற்கொண்டுள்ள பணிக்கு இடையூறாகப் போவது மட்டுமின்றி மூன்று பேர்களின் உயிருக்கும் ஆபத்தை ஏற்படுத்திவிடும் என்கின்ற எச்சரிக்கை உணர்வும்தான் பல செய்திகளை நாங்கள் வெளியிட முடியாமல் போனதற்குக் காரணம்.

இன்று காவலர்கள் மேற்கொண்ட பணிகளை வாய்க்கு வந்தபடி ஏசுபவர்கள், வீரப்பனைப் பிடிக்க முடியவில்லையா; தனி ஆள், இரட்டை ஆள் என்று வீரப்பனைக் கூறுகின்றவர்கள், இத்தனை பெரிய காவல் படை சென்று வீரப்பனையும் அவன் கூட்டத்தையும் பிடிக்க முடியவில்லையா என்று நிதானமின்றி இந்தப் பிரச்சினையை முழுமையாகப் புரிந்து கொள்ளாமல் பேசுகிறவர்களுக்கு சில உண்மைகளை வெளிப்படுத்த வேண்டுமென்று விரும்புகிறேன்."

நான் அல்ல, இதுவெல்லாம் ஜெயலலிதா பேச்சு. இப்போது ஜெயலலிதா பேசிக்கொண்டிருப்பதாகக் கற்பனை செய்துகொள்ளுங்கள்.

"பிணைக் கைதிகளாக வீரப்பனிடம் சிக்கிக் கொண்ட மூன்று பேர்களையும் எப்படியாவது காப்பாற்றி அழைத்து வருவதற்காக National Security Guard (NSG) Brigadier ஒருவரின் தலைமையிலே 180 பேர்கொண்ட ஒரு குழு மீட்புப் பணியை மேற்கொள்ள டெல்லியிலிருந்து வந்தது. N.S.G. என்பது மத்திய அரசின் அதிரடிப் படையாகும். கிட்டத்தட்ட 6,000 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் அமைந்துள்ள அடர்த்தியான வனப் பகுதிகளை நேரில் கண்ட பின்பு, இத்தகைய இடங்களில் மீட்புப் பணியை மேற்கொள்வது மிகவும் கடினமான காரியம் என்று கருத்து தெரிவித்து N.S.G. குழுவினர் திரும்பிச் சென்றுவிட்டார்கள்." இதுவும் ஜெயலலிதா சொன்னதுதான்.

"வீரப்பன் எங்கே ஒளிந்திருக்கிறான்? கட்டாந்தரையிலோ அல்லது களத்துமேட்டிலோ அல்ல; அடர்த்தியான மரங்கள் வளர்ந்து, ஆறு அடிக்கு அப்பால் ஒரு யானை நின்றால்கூட அது கண்ணுக்குத் தெரியாத ஒரு வனாந்தரப் பகுதியில் ஒளிந்துகொண்டிருக்கிறான். யானை நின்றாலே கண்ணுக்குத் தெரியாத அடர்த்தியான காட்டுப் பகுதியில் ஒரு ஒல்லியான மனிதன் மறைந்து நின்று, கொரில்லாத் தாக்குதலில் ஈடுபட்டால் அந்தச் சூழ்நிலையை எப்படிச் சமாளிக்க முடியும்?

மனைவி மக்களைப் பிரிந்து, மாதக் கணக்கில் ஓய்வு ஒழிச்சலின்றி தங்களது உயிருக்கு எப்போது ஆபத்து வரும் என்று தெரியாத நிலையில் பாடுபட்டு வரும் காவலர்களின் கடுமையான வாழ்க்கையைப் புரிந்து

கொள்ளாமல், சிலர் வக்கணை பேசுகிறார்கள், வசைச் சொல் கூறுகிறார்கள். இவற்றையெல்லாம் சிந்தித்துப் பார்க்காமல் காவல் துறையைக் களங்கப்படுத்திப் பேசுவது அறிவுடைமை ஆகாது.'' (மேசையைத் தட்டும் ஒலி) நான் சொல்லவில்லை. "அறிவுடைமை ஆகாது" என்று ஜெயலலிதா அம்மையார் சொல்கிறார். "வக்கணை பேசுகிறார்கள். வசைச் சொல் கூறுகிறார்கள். இவற்றையெல்லாம் சிந்தித்துப் பார்க்காமல், காவல் துறையைக் களங்கப்படுத்திப் பேசுவது அறிவுடைமை ஆகாது" என்று ஜெயலலிதா கூறியுள்ளார்.

பிறகு, 1993 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் இதே போன்றதொரு கடத்தல் வீரப்பனால் நடத்தப்பட்டபோது, ஒத்திவைப்புத் தீர்மானம். அதிலே அந்த அம்மையார் பேசுகிறார், "வீரப்பனைப் பிடிப்பதற்காக இராணுவத்தின் உதவியை நாட வேண்டும், இராணுவத்தினரால்தான் இது முடியும் என்று இங்கே எதிர்க்கட்சித் தலைவர் பேசினார். அதை இந்த நேரத்தில் நான் ஏற்றுக்கொள்ளமுடியாது. இராணுவத்தினர் இங்கே வந்தால் அதனால் வேறு சில பிரச்சினைகள் எழக்கூடும். இராணுவத்தினர் போடுகின்ற ஒரு நிபந்தனை, அந்தப் பகுதியிலே வாழ்கின்ற மக்களையெல்லாம் காலி செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள். அது சாத்தியமான காரியமல்ல. இந்த விஷப் பரிட்சையில் இறங்க இந்த அரசு விரும்பவில்லை. இராணுவத்தினருக்கு என்று சில திறமைகள் இருக்கலாம். ஆனால் அந்தப் பகுதியைப் பொறுத்தவரை, அந்தக் காடுகளைப் பொறுத்தவரை அவர்களுக்கு அது ஒரு Unknown terrain இந்தக் காட்டுப் பகுதியிலே உள்ள பாதைகள் எங்கே போகின்றன, எப்படிப் போகின்றன என்பதெல்லாம் இராணுவத்திற்குத் தெரியாது. ஆகவே இராணுவத்தை அழைக்க இயலாது'' என்றும் ஜெயலலிதா அவர்களே இதே அவையிலேதான் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். (குறுக்கீடு)

பிற்பகல் 12-10

**திரு. பி.ஆர். சுந்தரம்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். முதலமைச்சர் yield ஆகவில்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை. நான் அனுமதி கொடுக்கவில்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே. (குறுக்கீடு)

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுந்தரம், நீங்கள் உட்காருங்கள் இப்போது (குறுக்கீடு) சரி, நீங்கள் உட்காருங்கள் இப்பொழுது. உங்கள் பேச்சு குறிப்பேட்டிலே ஏறாது, உட்காருங்கள். நீங்கள் என்ன பேசினாலும் ஏறாது.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தீவிரவாதிகளை அனுப்பி இதுபோன்ற கடத்தல் சம்பவங்களில் அவர்களை விடுவிக்கின்ற முயற்சி ஒன்றும் புதிது அல்ல. இதற்குப் பல முன்மாதிரிகள் இருக்கின்றன.

சமீபத்திலே காத்மாண்டிலேயிருந்து 181 பயணிகளோடு புறப்பட்ட இந்தியன் ஏர்லைன்ஸ் விமானம் 5 தீவிரவாதிகளால் கடத்தப்பட்டது. அதில் 41 பேர் தமிழர்கள் இருந்தார்கள். மொத்த பயணிகளில் 27 பேர் விடுவிக்கப்பட்டார்கள். 4 பேர் கொல்லப்பட்டார்கள். கடத்தப்பட்ட விமானம் இறுதியாக ஆப்கானிஸ்தானத்தில் இருந்த காந்தகார் விமான நிலையத்தில் தரையிறங்கியது. விமான கடத்தல்காரர்களோடு ஐக்கிய நாடுகளின் தூதுக் குழுவே பேச்சுவார்த்தை நடத்தியது. அப்பொழுது, காஷ்மீரில் சிறை வைக்கப்பட்டிருந்த பாகிஸ்தானுடைய மதத் தலைவர் மவுல்லி மசூத் அசாரையும், வேறு சில தீவிரவாதிகளையும் விடுதலை செய்யாத வரையில் பயணிகளை விடுவிக்க முடியாது என்று கடத்தல்காரர்கள் திட்டவட்டமாகக் கூறிவிட்டனர். பயணிகளை விடுவிக்குமாறு தூதுக் குழு விடுத்த வேண்டுகோளைக் கடத்தல்காரர்கள் ஏற்க மறுத்துவிட்டார்கள். தங்கள் கோரிக்கை நிறைவேற்றப்படாத நிலையில் பயணிகளை விடுவிக்க முடியாது என்று கூறிவிட்டதால் பேச்சுவார்த்தை தோல்வியடைந்தது, தூதுக் குழு திரும்பிவிட்டது. விமானக் கடத்தலுக்குக் காஷ்மீர் தீவிரவாத அமைப்பான இஸ்லாமிய மீட்பு முன்னணி பொறுப்பேற்றுக்கொண்டது. மவுல்லி மசூத் அசார் உள்ளிட்ட தீவிரவாதிகளை விடுவிக்கக்கூடாது என்று இராணுவத் துறை நிபுணர்களெல்லாம் வற்புறுத்தியும்கூட கடத்தல்காரர்களோடு பேச்சுவார்த்தை நடத்த இந்தியத் தூதுக் குழு ஒன்று சென்று பேச்சுவார்த்தை நடத்தியது. இறுதியாக 8 நாட்களுக்குப் பிறகு உடன்பாடு ஏற்பட்டு, சிறைகளிலே அடைக்கப்பட்டிருந்த 3 தீவிரவாதிகள் விடுதலை செய்யப்பட்ட பிறகுதான் பயணிகள் எல்லாம் விடுவிக்கப்பட்டார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒரு செய்தி.

அதுமாத்திரம் அல்ல. அதற்கு முன்பேகூட, 1989-ல் வி.பி. சிங் அவர்கள் பிரதமராக இருந்த அந்தக் காலத்தில், மத்திய உள் துறை அமைச்சராகயிருந்த

2000 நவம்பர் 13] [கலைஞர் மு. கருணாநிதி]

முப்தி முகம்மது சையத் அவர்களுடைய மகள் ரூபையா சையத் அவர்களைக் காஷ்மீர் தீவிரவாதிகள் கடத்திச் சென்றுவிட்டார்கள். அவரை விடுவிக்க டிசம்பர் 13, 1989 அன்று ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணி —J.K.L.F. என்ற தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்த 5 தீவிரவாதிகள் விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள்.

மீண்டும் மார்ச் 1991-ல் காஷ்மீர் அரசியல் தலைவர் சைபுதீன் சோஸ் அவர்களின் மகள் நாஹீது என்பவர் தீவிரவாதிகளால் கடத்திச்செல்லப்பட்டபோது அவரை விடுவிக்க காஷ்மீர் தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்த 3 தீவிரவாதிகள் விடுவிக்கப்பட்டார்கள்.

1991-ல் இந்தியன் ஆயில் கம்பெனியின் மூத்த அதிகாரி துரைசாமி என்பவர் காஷ்மீர் தீவிரவாதிகளால் கடத்திச் செல்லப்படும்பொழுது அவரை விடுவிக்க ஆகஸ்ட் 20 அன்று 11 காஷ்மீர் தீவிரவாதிகள் விடுதலை செய்யப்பட்டார்கள்.

இன்னொன்றை உங்களுக்குச் சொல்ல விரும்புகின்றேன். பழ. நெடுமாறனையும், வேறு சில தீவிரவாதிகள் என்று உங்களால் சொல்லப்படுகின்றவர்களையும் குற்றம் சாட்டப்பட்டவர்களையும் அனுப்பியது தவறு என்று கூறப்பட்டது. சில மாதங்களுக்கு முன்பு ஆந்திராவில் நாலைந்து ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை நக்சலைட்டுகள் கடத்திக்கொண்டு போய்விட்டார்கள். அவர்களிடம் பேசி அதிகாரிகளை மீட்க யாரை அனுப்புவது என்ற கேள்வி எழுந்தது. அப்போது நக்சலைட்டுகளைச் சந்தித்துப் பேச்சு நடத்த யாரை அனுப்பலாம் என்ற ஒரு கருத்து உருவானது. நக்சலைட்டுகளால் கடத்தப்பட்ட ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை விடுவிக்க நக்சலைட் இயக்கத்திற்காக வாதாடிக்கொண்டு இருக்கின்ற வக்கீலையே அனுப்பலாம் என்று ஒரு கருத்து வந்தது. இந்தக் கருத்தை ஆந்திர அதிகாரிகள் கடுமையாக எதிர்த்தார்கள். ஐ.பி.எஸ். அதிகாரிகள் கடுமையாக எதிர்த்தார்கள். ஆனால் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் சங்கம் கூடி, எங்களைச் சேர்ந்த நாலைந்து அதிகாரிகள் நக்சலைட்டுகளால் கடத்தப்பட்டிருக்கும்பொழுது அதுபற்றி விவாதமா? எனவே அவர்களை மீட்க, வழக்கறிஞர் கண்ணபிரானைக் கட்டாயம் காட்டுக்கு அனுப்ப வேண்டுமென்று தீர்மானமே போட்டார்கள். பிறகு ஆந்திர அரசு, வழக்கறிஞர் கண்ணபிரானை அனுப்பி, அந்த நான்கைந்து ஐ.ஏ.எஸ். அதிகாரிகளையும் மீட்டு வந்தது. ஆகவே முள்ளை முள்ளால் எடுப்பது என்பார்களே, முள்ளிலே விழுந்த சேலையை, துணியை எடுப்பதைப் போல, ஆரம்பத்தில் செய்தோம். பிறகு, முள்ளை முள்ளால் எடுப்பதைப்

போல, அந்தக் காரியத்தையும் செய்யவேண்டிய அவசியத்திற்கு நாம் வந்திருக்கின்றோம் என்பதை இங்கே எடுத்துக்காட்ட விரும்புகின்றேன்.

*பிற்பகல் 12-15*

திரு. நெடுமாறன் அவர்களைப்பற்றிப் பேசப்பட்டது. நெடுமாறன் என்னமோ பிரிவினைவாதி, நெடுமாறன் தேசவிரோதி என்றெல்லாம்கூட நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அன்றைக்குப் பேசும்போது குறிப்பிட்டார்கள். நெடுமாறன் நடத்துகின்ற தமிழர் தேசியக் கட்சி, தடை செய்யப்பட்ட இயக்கம் அல்ல. அல்லது அவரும் அவரோடு சென்றிருக்கின்ற இரண்டு பேர், பேராசிரியர் கல்யாணி என்பவரும், பாண்டிச்சேரியைச் சேர்ந்த அவருடைய இயக்கத்தைச் சேர்ந்த சுகுமாரன் என்பவரும் மனித உரிமை மீட்பு கூட்டு இயக்கம் என்ற ஒன்றை நடத்துகிறார்கள். அதன் சார்பாகத்தான் போய் இருக்கிறார்கள். கேட்கலாம். அவர் பிரபாகரனுக்கு வேண்டியவர் அல்லவா, பிரபாகரனை ஆதரிப்பவர் அல்லவா, ராஜீவ் காந்தி கொலை வழக்கிலேகூட அந்தக் கொலையாளிகளுக்காகக் கருணை காட்டக்கூடியவர் அல்லவா என்றெல்லாம்கூடக் கேட்கலாம். நான் அதை மறுத்தோ அல்லது ஆதரித்தோ, அவர் அப்படிச் செய்தது சரிதான் என்றோ பேச வரவில்லை. ஆனால் அதற்கு இன்னொரு எடுத்துக்காட்டு இருக்கிறது. அதை மறந்து விட்டீர்களே. நெடுமாறன் என்ன செய்தாரோ, அதே காரியத்தை வீரமணி செய்துகொண்டிருக்கவில்லையா? என்ன பேசினார்? ஒரு ஆண்டு கூட முடியவில்லை. 1999 ஜனவரி 24 ஆம் நாள் சென்னையில் நடைபெற்றது 'எம்.ஜி.ஆரும், ஈழத் தமிழர்களும்' என்ற நூல் வெளியீட்டு விழா. அதில் வீரமணி பேசினார். "விடுதலைப் புலிகளின் மீதுள்ள தடையை நீக்குக என்று கோருவது, அரசியல் சட்டத்திற்குப் புறம்பானதோ, விரோதமானதோ அல்ல." அரசியல் சட்டம்பற்றி லத்தீப் அவர்களுக்கு என்னைவிட நன்றாகத் தெரியும். இங்கே பேசினார்கள். வீரமணி சொல்லியிருக்கிறார். "விடுதலைப் புலிகளின் மீதுள்ள தடையை நீக்குக என்று கோருவது அரசியல் சட்டத்திற்குப் புறம்பானதோ விரோதமானதோ அல்ல". மேலும் வீரமணி, "என்னைப் பொறுத்தவரையில், பிரபாகரன் தமிழ்ச் சமுதாயத் தலைவர் மட்டுமல்ல, என்னுடைய இளைய சகோதரனாகும்" என்று பேசியுள்ளார். யாருக்கு? வீரமணிக்கு. ராஜீவ் காந்தியைக் கொன்றதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ள பிரபாகரன், வீரமணிக்கு இளைய சகோதரன். மறந்துவிடாதீர்கள். நான், நெடுமாறனோ அல்லது வீரமணியோ இப்படிப் பேசுவதோ கருதுவதோ சரியென்று ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆள் அல்ல நான் என்பது உங்களுக்கெல்லாம் மிக நன்றாகத் தெரியும். ஆனால் அதே

வீரமணி அவர்கள், அவருடைய கட்சியினுடைய சார்பில் 1999 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 13 ஆம் நாள் மயிலாடுதுறையில் நடைபெற்ற—சில மாதங்களுக்கு முன்பு நடைபெற்ற—திராவிடர் கழகத்தினுடைய மத்திய செயற்குழுக் கூட்டத்தில் என்ன தீர்மானம் நிறைவேற்றினார் தெரியுமா? “ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டிக்கப்பட்ட நான்கு கைதிகளுக்கான தண்டனையைக் குறைக்க வேண்டுமென்று” குடியரசுத் தலைவர் திரு. கே.ஆர். நாராயணன் அவர்களுக்கு வேண்டுகோள் விடுத்து தீர்மானம் நிறைவேற்றினார்கள். அந்தத் தீர்மானத்தினுடைய முழு வாசகத்தையும் படிக்கிறேன்.

“அண்மையில் ராஜீவ் காந்தி கொலை வழக்கில், தடா சட்டம் அவ்வழக்கிற்குப் பொருந்தாது என்று தீர்ப்புக் கூறிய உச்ச நீதிமன்றம், அதே சட்டத்தின் அடிப்படையில் சட்ட வலிமை பெற்ற சாட்சியங்களை ஏற்று பலருக்குத் தண்டனை அளித்தது நியாயப்படி ஏற்கத்தக்கதல்ல.” “அதில் தூக்குத் தண்டனை பெற்றவர்களான நளினி, திருவாளர்கள் முருகன், பேரறிவாளன், சாந்தன் ஆகியோருக்குக் குறைந்தபட்சம் ஆயுள் தண்டனையாகக் குறைத்து அவர்களுக்கு கருணைகாட்ட வேண்டுமென்று குடியரசுத் தலைவரை இக்குழு வேண்டிக் கேட்டுக்கொள்கிறது”.

பிற்பகல் 12-20

அது மாத்திரமல்ல, 27-5-1999 ‘விடுதலை’ பத்திரிகையில் வீரமணி எழுதிய தலையங்கத்தில்—“தமிழ்நாட்டு அரசியலிலும் சரி, இந்திய அரசியலிலும் சரி, எப்போதாவது, யார் மீதாவது பழிபோட்டு மற்றவர்களைப்பற்றித் தவறான பிரச்சாரம் செய்வதற்கு ‘ரெடிமேடு’ பலிகடாவாக ஆக்கிட, என்றும் பலரால், குறிப்பாக சில அரசியல் கட்சிகளாலும், உளவுத் துறைகளில் மேலோங்கியுள்ள பார்ப்பன ஆதிக்கவாதிகளாலும் பயன்படுத்தப்படும் அமைப்பு ஈழத்தில் தன்னுரிமை, மனித உரிமைக்குப் போராடிக்கொண்டு இருக்கும் விடுதலைப் புலிகள் அமைப்பேயாகும். தமிழ்நாட்டிலோ, தென்னாப்பிரிக்காவிலோ அல்லது உலகெங்கும் உள்ள நாடுகளில் வாழும் தமிழர்களோ, ஈழத் தமிழர்களின் உரிமைப் போரை, விடுதலைப் போராட்டத்தை ஆதரிப்பது என்ன மாபெரும் சமூகக் குற்றமா” என்று கேட்ட வீரமணி அவர்கள் யாரோடு இருக்கிறார்; எங்கே இருக்கிறார்; எங்கே ராஜகுரு என்ற நிலையிலே இன்றைக்கு அவர் இருக்கிறார்



வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

என்பதெல்லாம் எல்லோருக்கும் தெரியும். அவருக்கு டெல்லியிலே, அங்கு நடைபெற்ற ஒரு விழாவிலே, டெல்லியினுடைய முதலமைச்சர் ஷீலா தீட்சித் அவர்கள் 5 இலட்சம் ரூபாய் அவருடைய நிறுவனத்திற்கு நிதிகூட, இப்போதுதான் ஒரு மாதத்திற்கு முன்புதான் கொடுத்திருக்கிறார். இங்கேகூட, பெரியார் விழா—ஒரு கமிட்டி போட்டு, அவர் அமைப்பாளராக இருந்து, நம்முடைய மக்கள் தலைவர் மூப்பனார் அவர்கள் குழுவினுடைய தலைவராக இருந்து நடத்தப்பட்டிருக்கிறது. நான் அதைத் தவறு என்று சொல்லவில்லை. அது சரி என்கிறபோது, நெடுமாறன் சென்றதும் சரிதான் என்பதற்காகத்தான் *(மேசையைத் தட்டும் பலத்த ஒலி)* இதைச் சொல்கிறேனேயல்லாமல், அதைத் தவறு என்று நான் சொல்லவில்லை என்று குறிப்பிட்டு, இந்த அளவில் கர்நாடக மக்களும், தமிழக மக்களும் சகோதரர்களாக வாழ்வதற்கேற்ற சூழ்நிலையை உருவாக்க இந்தத் தீர்மானம் பயன்படட்டும் என்றுகூறி, இந்த அளவில் என் உரையை நிறைவு செய்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**திரு. பி.ஆர். சுந்தரம்:** பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அனுமதி கொடுக்கவில்லை.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** ஒன்றைச் சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அனுமதி கொடுக்கவில்லை என்கிறேன். *(குறுக்கீடு)* விவாதம் முடிவுற்றது. நீங்கள் உட்காருங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** என்னுடைய கருத்தைத் தெரிவித்து வெளிநடப்புச் செய்ய வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் வெளிநடப்புச் செய்யுங்கள். *(குறுக்கீடு)* வெளிநடப்புச் செய்யுங்கள், யார் வேண்டாம் என்றார்கள். நான் வெளி நடப்புச் செய்கிறேன் என்று சொல்லிவிட்டுப் போங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அதற்காகத்தான் நான் மைக் கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லிவிட்டு, வெளிநடப்புச் செய்யுங்கள்.